செய்தி வெளியீட்டு எண்–927 நாள்–4.12.2009

# செய்தி வெளியீடு

## தொடக்கக் கல்வித் துறை வரலாற்றில் முதன் முறையாக நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 67 உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு

## மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கினார்

* * * * * * * **

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (4.12.2009) தலைமைச் செயலகத்தில் உதவி தொடக்கக்கல்வி அலுவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பள்ளிக் கல்வித் துறை மான்ய கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி தொடக்கக் கல்வித் துறை வரலாற்றில் முதன் முறையாக நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 67 உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, சிறப்பாக பணியாற்றுமாறு மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும், பள்ளிக் கல்வித் துறையில், கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு பெற்ற 42 பேர்களுக்கும் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ம.குற்றாலிங்கம், ஆசிரியர் தேர்வுவாரியத் தலைவர் திரு.இராமையா, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பெ.பெருமாள்சாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு.கு.தேவராஜன், ஆகியோர் கலந்துகொண்டனர்.

* * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.